


## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில்

# துறைமுகம் தொகுதியில் கிறிஸ்துமஸ் பெருவிழா - 2025!

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்து 3000 கிறிஸ்துவ சகோதர குடும்பங்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்பிக்கின்றார்!

சென்னை, டிச.21-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கேசேகர்பாபு ஏற்பாட்டில் இன்று (21.12.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 7.00 மணி அளவில் சென்னை, பிராட்வே, தொன் பாஸ்கோ பள்ளி வளாகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன், டான்பாஸ்கோ பள்ளி ரெக்டார் (ம) தாளாளர் அருட்தந்தை ஜோஆண்ட்ரூ ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழா 2025-ஐ, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று 3000 கிறிஸ்துவ சகோதர குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் தெரிவித்து பரிசு பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

இந்த இனிய விழாவில் முன்னாள் சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சிஎஸ்ஐ. சென்னை பேராயம் கௌரவச் செயலாளர் அருள் பணி அகஸ்டின் பிரேம் ராஜ் சி.எஸ்.ஐ சென்னை பேராயம், துணை தலைவர் அருள்பணி ஜெயசீலன் ஞானாதிக்கம், பங்கு தந்தை சவேரியார் ஆலயம் அருட்திரு. சுந்தர் ராஜ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், இ. பரந்தாமன், ப.ரங்கநாதன், கே.எஸ் ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, சி. மகேஷ்குமார், கே.சந்துரு, தமிழன் பிரசன்னா, சரிதா மகேஷ்குமார் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, கூ.பீ.ஜெயின். எம்.சி, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்சி, ஆர்.வரதன்,

பகுதி கழகச் செயலாளர்கள்: எஸ் ராஜசேகர், எஸ்.முரளி, இசட்.ஆசாத், ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, ரஞ்சித் விஜயன், பி.விஜயகுமார், எல். சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார் எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம். ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே. பா.பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் 21.12.2025 மாலை 6:00 மணியளவில் காணொளிக் காட்சி வாயிலாக நடைபெறவுள்ள நிலையில், கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது. கூட்டம் நடைபெறும் தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 20.12.2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## விடுபட்ட வாக்காளர் - புதிய வாக்காளர் சேர்ப்பில் தீவிரமாக பணியாற்றுவோம்! மகாத்மா காந்தி பெயரை நீக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# டிச.24 இல் நடைபெறும் போராட்டத்தை வெற்றி பெறச் செய்வோம்!

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத் தீர்மானம்-மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம், டிச.21

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் மதுராந்தகம் ஹோட்டல் ஹைவே கூட்டரங்கில் நேற்று (20.12.2025) காலை மாவட்டக் கழக அவைத் தலைவர் ச. இனியரசு தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒ. எஸ். தினகரன். க. செல்வம் எம். பி., திருமதி மலர் விழி குமார், சன் பிராண்டு ஆறுமுகம், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சாரதி மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர் சி. வி. எம். பி. எழிலரசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.அரசு, எம். எஸ். சுகுமார், எஸ். ஆர் .அப்பாதுரை, மாநில இலக்கிய அணி ஆர். தசரதன், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ். டி. பிரேம்சந்த், எஸ் . உசேன், எஸ். கே. ராஜேந்திரன், பொன். சசிகுமார், நகரச் செயலாளர் கே குமார், ஒன்றியச் செயலாளர்கள் டி.வி. கோகுல கண்ணன், கெ. ஞானசேகரன், பி.எம். குமார், க. குமணன், டி குமார், பி. சேகர், பி.எம். பாபு, சத்ய சாய் கேகண்ணன், ஜி தம்பு, ஏழுமலை, சிற்றரசு, சரவணன், எம். எஸ். பாபு, கே .எஸ் .ஆர். கார்த்திகேயன், பகுதி செயலாளர்கள் எஸ். சந்துரு, சு. வெங்கடேசன், கே.திலகர், அ. தசரதன், வ. ஜெகநாதன்,

பேரூர் செயலாளர்கள் என்.எஸ். பாரி வள்ளல், என்.



பாண்டியன், ஆ. சுந்தரமூர்த்தி, மோகன் தாஸ், வி. எழிலரசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ. யுவராஜ், எம். குணசேகரன், வ. மலர்மன்னன், நாத்திகம் நாகராஜன், எஸ். மாலதி, என். பாரத், ஜி. தெய்வசிகாமணி, திருமதி. கலைச்செல்வி ஜெகநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள்.டி. சஞ்சய் காந்தி. யுவராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல். ஏ தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

அத் தீர்மானங்கள் வருமாறு:

**விடுபட்ட வாக்காளர் சேர்ப்பில் தனி கவனம் செலுத்துவோம்!**

நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் ஜுஐசு வாக்காளர் பணிகள் முடிவு பெற்று வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. தற்போது வந்துள்ள புதிய வாக்காளர் பட்டியலை அந்தந்த வாக்குச் சாவடிக்கு உட்பட்ட கிளை கழக செயலாளர். பாக முகவர்கள். பாக நிலைக் குழு உறுப்பினர்கள் ஆகியவர்களிடம் இந்த வாக்காளர் பட்டியலை அவர்களிடம் சரி பார்த்து, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை ஒப்பிட்டு அதில் உள்ள விடுபட்டுள்ள உறுப்பினர்களை சேர்க்கும் பணியினை உடனடியாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள குறிப்பிட்ட தேதி 20.12.25 21.12.25 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய தேதிகளில் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணியை தீவிரப்படுத்தி மற்றும் புதிதாக வாக்குச்சாவடி எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அந்தந்த வாக்குச்சாவடிகளை கிளைக் கழக செயலாளர்கள் சரிபார்த்திடவும் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**மகளிர்க்கு ரூ ஆயிரம் திட்டத்தை விரிவுபடுத்திய முதல்வருக்கு நன்றி!**

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை விடுபட்ட 17 லட்சம் மகளிர்க்கும் வழங்கி ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கிய இந்தியாவின் நம்பர் 01. முதல்வர் தலைவருக்கு இந்த மாவட்ட கழகம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி!**

திருவண்ணாமலை மாவட்டத்தில் வடக்கு மண்டலத்துக் குட்பட்ட 29 கழக மாவட்டங்களில் புதிதாக நியமிக்கப்பட்ட ஒரு லட்சத்து 30 ஆயிரம் இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியை கடந்த 14ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் பிரம்மாண்டமாக நடத்திய துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், சிறப்பாக ஏற்பாடு செய்த அமைச்சர் எ.வ. வேலு அவர்களுக்கும் காஞ்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக பாராட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

100 நாள் வேலைத்திட்டத்தை அழித்து ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகார செயலையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வை கண்டித்தும் டிசம்பர் 24 அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் முன்பு நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை அரவணைத்து கீழ்க்கண்ட ஒன்றியங்கள் வாரியாக நடத்திட தீர்மானிக்கப்படுகிறது உத்திரமேரூர், வாலாஜாபாத், காஞ்சிபுரம், மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம் ,சித்தாமூர், லத்தூர்.

**பொங்கல் திருவிழாவை சிறப்பாக கொண்டாடுவோம்!**

தை ஒன்று தமிழ் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி மக்களை சந்திக்கின்ற விதத்தில் கோலப்போட்டி, விளையாட்டுப் போட்டிகள் என பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திட மாவட்ட கழகம் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (20.12.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், பேரக்ஸ் தெரு, மைதானத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்ட இறகுபந்து உள்விளையாட்டு அரங்கம், கைப்பந்து ஆடுகளம், கூடை பந்து ஆடுகளத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து கூடைப் பந்து ஆடுகளத்தில் பள்ளி மாணவிகளின் கூடைப்பந்து போட்டியினை தொடங்கி வைத்து பார்வையிட்டனர். இந்நிகழ்வின்போது மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டாரத் துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் எல்.தாஹா நவீன், வெ.பரிமளம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.